# International Workshop on Creativity and Chaos organized by Unit of CSR,NIEPMD on 15th July, 2021

## மாற்றுத்திறனாளிகளுக்கான இணைய வழி கருத்தரங்கு

திருப்போரூர், ஜூலை 18: சென்னை முட்டுக்காட்டில், மத்திய அரசின் சமூக நீதித்துறையின் கீழ் இயங்கும் மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனம் நடத்திய சர்வதேச இணையவழி கருத்தரங்கு நேற்று நடந்தது. இதில், சிறப்புத்திறன் வாய்ந்த குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் அவர்களது படைப்பாற்றலை பேணிக்காக்கும் முறைகளைப் பற்றி கத்தாரில் வசிக்கும் ஆலோசகர் மற்றும் பயிற்சியாளர் ரீமா மேத்யூ கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கருத்தரங்கில் பல சிறப்புக் குழந்தைகள், அவர்களது பெற்றோர்கள், அவர்களுடன் பணியாற்றும் ஆசிரியர்கள், இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருக்கும் பல்வேறு கல்லூரி மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழகங்களை சார்ந்தவர்களும் பங்கு பெற்றனர். மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டுக்கான தேசிய நிறுவனத்தின் இயக்குனர் நச்சிகேதா ரவுத், துணை பதிவாளர் சங்கரநாராயணன், வழக்கறிஞர் முனைவர் அபிநயா, நிறுவன முதல்வர் லீலாவதி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

Dinakaran 18.07.21

### மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனத்தில்

# நிறுமச் சமுதாயப் பொறுப்புகள் துறை நடத்திய சர்வதேச கருத்தரங்கு

சென்னை, ஜூலை.16–

சென்னைமுட்டுக்காட்டில், மத்திய அரசின் சமூக நீதித்துறையின் கீழ் இயங்கி வரும்மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனம்நடத்தியசர்வதேச இணையவழி கருத்தரங்கு ஜூலை15ஆம்தேதிமதியம்2.30 மணி அளவில்நடந்தேறியது.

இந்த நிகழ்ச்சியில் 'சிறப்புத்திறன் வாய்ந்த குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் அவர்களது படைப்பாற்றலை பேணிக்காக்கும்முறைகளைப் பற்றி கத்தாரில் வசிக்கும் ஆலோசகர் மற்றும் பயிற்சியாளர் திருமதி. ரீமா மேத்தியு அவர்கள் சிறப்புரையாற்றினார். சுமார் 2 மணி நேரம் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் பல சிறப்புக் குழந்தைகள், அவர்களது பெற்றோர்கள்,



அவர்களுடன்பனியாற்றும் ஆசிரியர்கள்,இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருக்கும் பல்வேறுகல்லூரிமாணவர்கள் மற்றும்பல்கலைக்கழகங்களைச் சார்ந்தவர்களும் பங்குபெற்றனர். உலகளவில் உள்ளசிறப்புக்குழந்தைகளின் பெற்றோர் மற்றும் சிறப்புக் கல்வியாளர்கள் எதிர்கொள்ளும்சவால்கள் என்னென்ன என்பதையும் அவற்றை வெற்றிகரமாக கடந்து வரும் முறைகள் பற்றிய கருத்தகளை பரிமாற பெரிதும் உதவியாகஇருந்த இந்தக் கலந்துரையாடல், அதில் பங்கேற்ற அனைவருக்கும் மிகவும் பயனுள்ளதாகஅமைந்தது. மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனத்தின் இயக்குனர் நச்சிகேத ரவுத், துணை பதிவாளர்சங்கரநாராயணன், வழக்கறிஞர் முனைவர் அபிநயா, லீலாவதி, முதல்வர் (பொறுப்பு), ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோருக்கான மாதிரிப்பள்ளி ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

Maalai News 17.07.21